
# பல மணி நேர மின்வெட்டால் நோயாளிகள் அவதி!





திருச்சி பொன்மலையில் ரயில்வே தலைமை மருத்துவமனையில் நேற்று முன்தினம் காலை 6 மணியளவில் திடீரென மின்தடை ஏற்பட்டது. பிற்பகல் 12 மணி வரை மின்சாரம் வரவில்லை. இதனால் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் குழந்தைகள், சிறுவர்கள், முதியோர் கடும் அவதியடைந்தனர். கைகளில் கிடைத்த அட்டைகள், பனை விசிறிகளை கொண்டு உறவினர்கள் நோயாளிகளுக்கு விசிறி விட்டனர். குறிப்பாக, கண் அறுவை சிகிச்சை செய்து கொண்டு வார்டுகளில் அனுமதிக்கப்பட்டிருந்த நோயாளிகள் உள்ளே நிலவிய கடுமையான புழுக்கம் காரணமாக வார்டுகளை விட்டு வெளியேறி, மருத்துவமனை வளாகத்தின் திறந்த வெளியில் அமர்ந்து ஆசுவாசப்படுத்தி கொண்டனர். இங்கு உள்ள ஜெனரேட்டர் செயல்படாததே இந்த பிரச்சினைக்கு காரணம் என்று கூறப்படுகிறது. ஒன்றிய அரசின் கட்டுப்பாட்டில் செயல்படும் மருத்துவமனையில் ஜெனரேட்டர் வசதி கூட இல்லையே என்று நோயாளிகள் ஆதங்கத்தில் உள்ளனர்.

# பட்டிக்காடும் பட்டணமும்



**பட்டிக்காடு :** ஏன் தம்பி; த.வெ.க ஆட்சி 3 மாதமாவது தாங்குமா என்ற ஆழ்ந்த அய்யப்பாட்டினை எழுப்பியிருக்கிறாரே கழகத் தலைவர் ?

**பட்டணம் :** **ஆமாமய்யா; வீடு வீடாக ஏறி இறங்கி இரவல் வாங்கித் தானே இந்த த.வெ.க. ஆட்சி அமைக்கப்பட்டுள்ளது!**

**அரை குறைப் பிரசவம் தானே இந்த ஆட்சி!**

**அதனால், கழகத் தலைவர் அப்படிச் சொல்லி இருக்கிறார்.**

# அடிக்கடி 'பவர்கட்' உண்மைதான்: மின்வாரிய தலைவர் ஒப்புதல்!

திருவண்ணாமலை, ஜூன் 9-

திருவண்ணாமலை அண்ணாமலையார் கோயிலில், தமிழ்நாடு மின்வாரிய தலைவர் மற்றும் நிர்வாக இயக்குனர் ராதாகிருஷ்ணன் குடும்பத்தினருடன் சுவாமி தரிசனம் செய்தார். அதைத் தொடர்ந்து, அவர் அளித்த பேட்டியில் தெரிவித்ததாவது:-

தமிழ்நாட்டில் மின் தேவை ஏப்ரல் மாதம் உச்சகட்டமாக 21366 மெகாவாட் இருந்தது. அதைத் தொடர்ந்து, 20 ஆயிரம் மெகாவாட் என மின் தேவை குறைந்திருக்கிறது. இரவு நேரங்களில் ஏற்படும் மின்வெட்டு பிரச்சினையை மறைக்கவும் மறுக்கவும் இல்லை. அதற்கு, டிமாண்ட் ஓவர்லோடு தான் காரணம். பகிர்மான காரணங்களால் இது போன்ற மின் தடை ஏற்படுகிறது.

உற்பத்திக்கும் இதற்கும் சம்பந்தமில்லை. தேவையான மின்சாரம் இருக்கிறது. நகர்ப்புறங்களில் கேபிள் கட், சர்வீஸ் சிக்கல் போன்ற காரணங்களால் இந்த நிலை ஏற்படுகிறது. நாளுக்கு நாள் மின் தேவை அதிகரித்து வரும் சூழல் உள்ளது. பெரிய டவர்கள், துணை மின் நிலையங்கள் தேவையும், பணியாளர் பற்றாக்குறையும் உள்ளது. பணியாளர்களை பணியமர்த்த தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மூன்று வாரத்துக்கு முன்பு ஏற்பட்ட சவால்கள் மின் தடை ஆகியவற்றை சீர் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டதன் மூலம் தற்போது பிரச்சினை குறைந்து வருகிறது.

தமிழ்நாட்டில் 5 லட்சம் மின் மாற்றிகள் உள்ளது. 20 ஆயிரம் மெகாவாட் தேவையுள்ள நிலையில், மின் உற்பத்தியை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது. தண்ணீர் பற்றாக்குறை காரணமாக மின் உற்பத்தி குறைந்திருக்கிறது. பவர் கிரிட் 24 மணி நேரமும் கண்காணிக்கப்பட்டு வருகிறது. பகல் நேரங்களில் 7 ஆயிரம் மெகாவாட் மின் உற்பத்தி சோலார் மூலம் கிடைக்கிறது. கோடைகாலங்களில் சந்திக்கும் சிக்கல்களை, மின்பற்றாக் குறையை தீர்க்க நடவடிக்கை எடுத்து வருகிறோம். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

# நெல்லை மேற்கு மாவட்டக் கழகச் செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டப் பொறுப்பாளர் இரா.ஆவுடையப்பன் அறிக்கை!



நெல்லை, ஜூன் 9-

நெல்லை மேற்கு மாவட்ட தி.மு.க. பொறுப்பாளர் இரா.ஆவுடையப்பன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

கழகத்தலைவர் தளபதியார் அவர்களின் ஆணைப்படி, நெல்லை மேற்கு மாவட்ட கழக செயற்குழு கூட்டம் இன்று (09.06. 2026-செவ்வாய்க் கிழமை) மாலை 04.00 மணி அளவில் நெல்லை மேற்கு மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில் எனது தலைமையில் மாவட்ட பொறுப்பாளர் இரா. ஆவுடையப்பன் தலைமையில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், மாநில அணி நிர்வாகிகள், பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் செயலாளர்கள், மாவட்ட சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் அனைவரும் தவறாது பங்கேற்று கருத்துகளை வழங்க கேட்டுக் கொள்கிறேன்.

பொருள்: கழக வளர்ச்சிப்பணிகள்.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

### மயிலாடுதுறை மாவட்ட தி.மு.க. சார்பில் – முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்த நாள் விழா!

# ஜூன் 3 ஆம் தேதி பிறந்த குழந்தைகளுக்கு தங்க மோதிரம்!

## மாவட்டச் செயலாளர் நிவேதா முருகன் அணிவித்தார்!


மயிலாடுதுறை, ஜூன் 9 -

மயிலாடுதுறை மாவட்ட தி.மு.க. சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் 103 வது பிறந்த நாளை முன்னிட்டு ஜூன் 3ஆம் தேதி மயிலாடுதுறை அரசு மருத்துவமனையில் பிறந்த 21குழந்தைகளுக்கு தங்க மோதிரத்தை மாவட்டச் செயலாளர் நிவேதா , எம். முருகன் எம்.எல்.ஏ. அணிவித்தார்.

மயிலாடுதுறை மாவட்ட தி.மு.க. சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் 103 வது பிறந்த நாளை முன்னிட்டு மயிலாடுதுறை மாவட்ட அரசு மருத்துவமனையில் ஜூன் 3ஆம் தேதி பிறந்த 21 குழந்தைகளுக்கு தலா ஒரு கிராம் வீதம் தங்க மோதிரத்தை மயிலாடுதுறை மாவட்ட கழக செயலாளர், பூம்புகார் சட்டமன்ற உறுப்பினர் நிவேதா எம்.முருகன் அணிவித்தார்.

நிகழ்ச்சியில் மாநில இலக்கிய அணி துணை செயலாளர் வை.சௌமியன், மாவட்ட துணை செயலாளர்கள் மு.ஞானவேலன், எஸ். செல்வமணி, கண்ணகி பன்னீர்,

பொருளாளர் மகா. அலெக்சாண்டர், மயிலாடுதுறை நகர கழக செயலாளர் குண்டாமணி (எ) என். செல்வராஜ், ஒன்றிய கழக செயலாளர் மூவலூர் எம். மூர்த்தி, மங்கை எம்.சங்கர், என். இளையபெருமாள், ஏ.ஆர்.ராஜா, கு.வைத்தியநாதன், பஞ்சு.குமார், பொதுக்குழு உறுப்பினர்கள் பி.சிவ தாஸ். ஹர்ஷத் நத்தம் ஏ.வின்சென்ட், மாவட்ட சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் எம்.கே.மருது, வி.எஸ்.பிரபாகர், இரா.மனோகரன், செல்வராஜ், வெடி எஸ். பாலமுருகன், இராக்குமார், சாந்தி, தீபா, மாவட்ட சார்பு அணி துணை அமைப்பாளர்கள் சக்திவிஜய், சௌ.சர்வோதயன், மயிலாடுதுறை நகரக் கழக நிர்வாகிகர் மலைக்கோயில் பிரபாகரன், வை தெய்வநாயகம் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.



திருச்சி தெற்கு மாவட்டக் கழக அலுவலகத்தில் மாவட்டக் கழகச் செயலாளர் முனைவர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி முன்னிலையில் திருச்சி மாவட்ட காங்கிரஸ் கமிட்டி (தெற்கு) மாவட்ட துணைத்தலைவர் மிலிட்டரி நா. முருகன், 14 வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திருமதி வசந்தாதேவி, முருகன் ஆகியோர் கழகத்தில் இணைந்தனர். நிகழ்வின் போது மணப்பாறை நகரக் கழகச் செயலாளர் மு.ம.செல்வம் உடன் இருந்தார்.



சிவகங்கையில் வழக்கறிஞர் அணி சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு முதியோர் இல்லத்தில் காலை உணவினை வழக்கறிஞர் ஆர்.பிரபாகரன் வழங்கினார். உடன் மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர் வழக்கறிஞர் ராஜ அமுதன்,துஷாந்த் பிரதீப் குமார் உட்பட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### ஓமன் தி.மு.க. அயலக அணி சார்பில் –

# மஸ்கட் மாநகரில் முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்தநாள் விழா!

## பி.கே.சிவக்குமார் தலைமையில் நடைபெற்றது!

மஸ்கட், ஜூன் 9-

ஓமன் திமுக அயலக அணி சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞரின் 103 வது பிறந்தநாள் விழா மிக விமர்சையாக மஸ்கட் மாநகரில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியினை ஓமன் தி.மு.க. செயலாளர் சிவக்குமார் துவக்கி வைக்க, அவைத்தலைவர் பாலமுருகன் வரவேற்புரை ஆற்றிட, பொருளாளர் சிவசெந்தில் நிகழ்ச்சியினை தொகுத்து வழங்கி நன்றி உரை ஆற்றினார்.

இந்நிகழ்ச்சியில் ஓமன் தி.மு.க. அயலக அணி துணை அமைப்பாளர்கள் முகமது பாரூக் அயூப் கான், மற்றும் நிர்வாக குழு சார்ந்த உறுப்பினர்களான முனைவர் சுந்தர வடிவழகன், ராமச்சந்திரன், ஓம் பிரகாஷ், கவிஞர் சுதர்சன், மாணிக்கவேல், தயாநிதி, மார்சலின், ராஜன், பிராங்கிளின், சுவாஜிதின் அபுததிர், கோபாலகிருஷ்ணன், மருத்துவர் மலர் வண்ணன், சுந்தர், மருத்துவர் பஷீர் அகமத், பேச்சி முத்து, பாட்ஷா, காதர், முகமது அன்சாஷ் முகமது இஸ்மாயில், நசீர் கான், ஹாஜா மைதீன், முகமது சுபயான், அகம் மைதீன், வைஸ்லீ பேராசிரியர் மாரிமுத்து, ராஜகோபால், கண்ணதாசன், பிரதீப், குமார், சலாருதீன், அப்துல் சமத், கமல் பிரவீன் ராஜ், சதீஷ், தாரிக், ரபிக், காமில் மற்றும் கழக மகளிர் அணியைச் சார்ந்த நிர்வாகிகள் ரேவதி அறிவுச்செல்வி, உமா மகேஸ்வரி, சத்யா, அஸ்மா பேகம், பகரா பாத்திமா, யோகன், அவந்திகா,

கவிஸ்ரீ மற்றும் ஓமன் திமுக GENZ குரூப்ஸ் மற்றும் பல்வேறு துறையை சார்ந்த வல்லுனர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர். இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பேசிய அனைவரும் நம் சமூக நீதியின் சூரியன் கலைஞர் அவர்களால் தமிழ்நாட்டிற்கு ஏற்பட்ட அரை நூற்றாண்டு சாதனைகளை வரலாற்றுச் செய்திகளை பேசியது சிறப்பு வாய்ந்ததாக அமைந்திருந்தது.

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களால் ஒவ்வொரு குடும்பமும் பெற்ற நன்மைகளும், கலைஞர் அவர்கள் ரத்து செய்த நுழைவுத் தேர்வுகளைப் பற்றியும் அடிப்படை கல்வி முதல் கல்லூரி கல்வி வரை அவர் நம் தமிழ் சமூகத்திற்கு செய்த எண்ணற்ற நன்மைகளும் குறிப்பாக பெண்களின் முன்னேற்றத்திற்காக அவர் கொண்டு வந்த சீர்திருத்தங்களும் என அனைத்து தகவல் களஞ்சியங்களும் அனைவருக்கும் அறியும் வண்ணம் எடுத்துரைக்கப்பட்டது.

தமிழ்த்தாய் வாழ்த்துக்களோடு தொடங்கப்பட்ட இந்த நிகழ்ச்சி இறுதியில் அனைவரின் மனதிலும் " கலைஞர் ஓர் சகாப்தம்" என்ற எண்ணங்களோடு மீண்டும் கழக ஆட்சியினை கொண்டு வர வேண்டும் என்று உறுதி மொழி ஏற்பு நிகழ்ச்சியாக முடிந்தது.

### வந்தவாசி தொ.மு.ச. சார்பில்

# முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்தநாள் நாள் விழா!

வந்தவாசி ஜூன் 9-

திருவண்ணாமலை வடக்கு மாவட்டம் வந்தவாசி போக்குவரத்து பணிமனை (1) சார்பில் முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் 103 - ம் பிறந்த நாள் விழா தொ.மு. ச. தேவ பிரகாஷ் முன்னிலையில் பொதுமக்களுக்கு அறுசுவை வழங்கிக் கொண்டாடப்பட்டது. விழாவில் எம். எஸ். தரணிவேந்தன், எம். பி.அம்பேத்குமார் எம். எல்.ஏ., மற்றும் கழக நிர்வாகிகள் கலந்துகொண்டனர். விழாவில் சாத்தப்பூண்டி கிளைக் கழகச் செயலாளர் சி. சீனுவாசன் நன்றி கூறினார்.




காங்கிரஸ் கட்சியின் கோவை வடக்கு மாவட்டச் செயலாளர் செல்வராஜ் அக்கட்சியில் இருந்து விலகி கோவை தெற்கு மாவட்டக் கழக செயலாளர் தளபதி முருகேசன் முன்னிலையில் தி.மு.கழகத்தில் இணைந்தார். இதில் மாநில கல்வியாளர் அணி தலைவர் புலவர் செந்தலை ந.கௌதமன், வால்பாறை சட்டமன்ற உறுப்பினர் குட்டி (எ) சுதாகர், சூலூர் தெற்கு ஒன்றிய செயலாளர் மன்னவன், கோவை தெற்கு மாவட்ட சுற்றுச்சூழல் அணி அமைப்பாளர் பசுமை நிழல் சூ.ஆ.விஜயகுமார், சூலூர் நகர கழக செயலாளர் சு.கவுதமன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் பீடம்பள்ளி சுரேஷ்குமார், பொதுக்குழு உறுப்பினர் ரகு துரைராஜ் உள்பட பலர் கலந்து கொண்டனர்.